மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.09/2025
இன்
அசல் வழக்கு எண்.59/2017
------

1. R. கருப்பாயம்மாள்
2. இராமச்சந்திரன் ஆசாரி (இறப்பு)
3. R. முருகன்
4. R. வேலம்மாள்
5. S. மூர்த்தியம்மாள் .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதி
மாவட்ட ஆட்சியர்மூலம், விருதுநகர்
2. மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
3. உதவி இயக்குநர் நில அளவை மற்றும்
ஆவணம், விருதுநகர்.
4. வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர் வருவாய் கோட்டம், சாத்தூர்.
5. வருவாய் வட்டாட்சியர்,
வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம்,
வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
6. ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்,
வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
7. இராவனேஸ்வரன்
8. ஜெயகுருநாதன் .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 06.03.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அருணாசலம், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 7 ம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. சி. முத்துக்கண்ணு, அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது பிராதை சீர்திருத்தம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**3ம் மனுதாரர்/3ம் வாதி தரப்பு மனுவின் சுருக்கம்**</u>–

**2.1.** மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு அய்யப்ப நாயக்கர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாகும். மேற்படி அய்யப்ப நாயக்கருக்கு பெரிய அய்யப்ப நாயக்கர், நடுவுல அய்யப்ப நாயக்கர், சின்ன அய்யப்ப நாயக்கர் என்ற மகன்கள் இருந்து வந்துள்ளார்கள். தாவா சொத்து சேர்வைக்காரன்பட்டி கிராமம் ஜமீன் கிராமமாக இருந்து வந்த காரணத்தால் தாவா சொத்துக்களுக்கு ஜமீன் பைமாஸ் நம்பர் 64E என்று இருந்து வந்துள்ளது. அய்யப்ப நாயக்கர் இறந்த பின்னர் அவரது மகன் பெரிய அய்யப்ப நாயக்கர் தாவா சொத்தில் அய்யப்ப நாயக்கருக்கு பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். அதன்பின் சின்ன அய்யப்ப நாயக்கரின் மகளும் சாமி நாயக்கரின் மனைவியுமான போலம்மாள் என்ற அய்யம்மாள் என்பவர் தன் தகப்பனார் பாகத்தை நடவுல அய்யப்ப நாயக்கருக்கு 08.05.1956 தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார்.

2.2. அதனால் சேர்வைக்காரன்பட்டி பைமாஸ் நம்பர் 64E–ன் படி உள்ள சொத்து தற்போதைய சர்வே எண்.14–ன் படி ஏக்கர் 4 செண்டு 55 நிலம் இருந்து

வந்துள்ளது. மேற்படி பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமால்களின்படி சேர்வைக்காரன்பட்டி கிராமம் சர்வே எண்.14–ல் உள்ள 4 ஏக்கர் 55 செண்டுக்கு மேல்புறம் தான் வண்டிப்பாதை இருப்பது தெரிய வருகிறது. மேற்படி வண்டிப்பாதை சாத்தூரிலிருந்து சங்கரன்கோவில் செல்லும் கிழமேல் ரோட்டிலிருந்து தெற்கு பக்கம் பிரிந்து சங்கரபாண்டியபுரம் கிராமம் மேல்நிலை பள்ளி உள்ள கட்டிடம் மற்றும் வளாகத்தின் வழியாக சென்று தெற்கு நோக்கி சுமார் 1–1/2 கி.மீட்டர் சென்று அதன்பின் தாவா சொத்தின் மேல்புறத்தில் தெற்கு நோக்கி செல்கிறது. மேற்படி வண்டிப்பாதை செல்லும் பகுதி புஞ்சை நிலத்தை விட சுமார் 5 அடி முதல் 6 அடி வரை பள்ளமாக இருந்து வருகிறது. மேற்படி பள்ளம் வண்டி தடத்தின் வழியாக மழைநீர் சென்றதால் மண் அரிப்பு ஏற்பட்ட பள்ளமாகும். மேற்படி பள்ளம் மனுதாரர்கள் சொத்துக்கு மேற்கிலும், சங்கரபாண்டியபுரம் கிராமம் எல்லையை குறிக்கும் (Boundary Stone)–க்கு கிழக்கிலும் அமைந்துள்ளது.

2.3. மனுதாரர்கள் சொத்துக்கு Filed Stone மேற்கிலும் சங்கரபாண்டியபுரம் (Boundary Stone) எல்லைக் கல்லுக்கு கிழக்கிலும் தென்வடலாக ஓடை செல்கிறது. மேற்படி ஓடையாக உள்ள பகுதிதான் மனுதாரர்களது சொத்தில் மூலப்பத்திரத்தில் வண்டிப்பாதையாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி ஓடை (வண்டிப்பாதை) UDR அளவை நடந்த பின்னர் 7 மற்றும் 8 எதிர்மனுதாரர்களால் கிராம நிர்வாக அலுவலரின் துணையுடன் திருத்தம் செய்யப்பட்டு அளவுகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேல்புறம் உள்ள வண்டி பாதை (ஓடை) சங்கரபாண்டியபுரம் எல்லைக்கல்லிலிருந்து தாவா சொத்து Filed Stone வரை கிழமேலாக 19.6 மீட்டர் தென்வடலாக தனி அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சொத்து உட்பிரிவு செய்யப்படாமல் மனுதாரர்களது சொத்தாக காட்டப்பட்டுள்ளது. அதனால் வரைபடம் (FMB) மற்றும் சர்வே அளவுகள் அனைத்தும் தவறாக உள்ளது. மேற்படி தவறு மனுதாரர்களது வழக்கறிஞர் விசாரணைக்கு தயாராகும்போது தான் தெரிய வந்துள்ளது.

2.4. மனுதாரர்கள் சொத்துக்கு மேற்கிலும், சங்கரபாண்டியபுரம் எல்லைக்கும் கிழக்கிலும் வண்டிப்பாதை இருந்து வருகிறது. மேற்படி வண்டிப்பாதையை மறைத்து மனுதாரர்கள் புஞ்சைக்குள் நடுவில் இருப்பதாக 14/2 என்று தவறாக உட்பிரிவு செய்யப்பட்டு வண்டி பாதையாக காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்தில் சர்வே எண்.14/2 உட்பிரிவு தவறாக உள்ளது என்ற விவரம் மனுதாரருக்கு தாவா சொத்துக்கு கொடுத்த புலப்பட நகல், மூலபத்திரம் மற்றும் நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்த போதுதான் தெரிய வந்துள்ளது. எனவே மேற்படி தவறான உட்பிரிவை ரத்து செய்ய வேண்டியதாக உள்ளது.

2.5. மனுதாரர்கள் வழக்கறிஞர் தவறாக 14/2 உட்பிரிவு செய்யப்பட்டிருப்பதை அறிய வந்த பின்னர்தான் மேற்படி தவறை திருத்தம் செய்வதற்கு பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியதின் படியும், வழக்கின் தன்மைக்கு ஏற்பவும் வழக்கை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வழக்கை சீர்திருத்தம் செய்வதினால் வழக்கின் அடிப்படை தன்மையோ அல்லது வழக்குமூலமோ மாறக்கூடியதாக இல்லை. சீர்திருத்தம் செய்யாதபட்சத்தில் மனுதாரருக்கும் அவரது குடும்பத்திற்கும் மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக் கூடியதாக உள்ளது. எனவே மனுவில் கண்ட பிரகாரம் பிராதை திருத்தம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல்.

3. **<u>5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

**3.1.** மனுதாரர்/வாதிகளால் தாவா மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். தாவா அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு கடந்த 29.11.2017ம் தேதியில் இந்நிர் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டும், அசல் வழக்கில் பல்வேறு தேதிகளில் சாட்சிய விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டும், அசல் வழக்கானது

கடந்த 06.01.2020 ம் தேதியில் பட்டியல் வழக்காக போடப்பட்டு அசல் வழக்கில் வாதி தரப்பில் சாட்சிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணைக்காக வேண்டி வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

3.2. மேலும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் சர்வே எண்.14/2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்கிற விபரம் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள நிலையிலும், சாட்சி விசாரணையில் மேற்படி சர்வே எண்.14/2 குறித்து சாட்சியம் அளித்துள்ள நிலையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்துவிட்டு தற்போது அசல் வழக்கில் பிராதை சீர்திருத்தம் செய்ய தாவா மனுவை தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. தாவா மனுவில் சீர்திருத்தம் செய்ய வேண்டிய விபரத்தில் Boundary Stone–க்கும் வாதி சொத்துக்கான Filed Stone க்கும் இடைப்பட்ட கிழமேல் 19.6 மீட்டர் அளவுள்ள எந்தவித உட்பிரிவும் செய்யாமல் இருந்து வருகிறது என்று கூறு தாவா மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை. உட்பிரிவு செய்யப்படவில்லை என்று கூற இயலாது.

3.3. மேற்படி நிலமானது 0.06.0 என்று உட்பிரிவு செய்யப்பட்டு கிராம கணக்கில் வண்டிப்பாதை என்று தாக்கலாகியுள்ளது. அது குறித்து இந்நிர் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சர்வே எண்.14/2 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு வண்டிப்பாதை என்று தாக்கலாகியுள்ளதால் அதனை ரத்து செய்ய கோரி அனுமதிக்க இயலாது. தாவா மனுதாரர் கோருவது போல பரிகார காலத்தினை சீர்திருத்தம் செய்யும்போது வழக்குமூலம் மாறும் என்பதால் தாவா மனுவை அனுமதிக்க இயலாது. அதேபோல தாவா மனுவில் சர்வே எண்.14/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ள தவறான உட்பிரிவை நீக்கரவு செய்ய 1 முதல் 4 வரையான பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியுள்ள நிலையில் அதற்கான நீதிமன்ற

கட்டணம் ஏதும் தாவா மனுவுடன் தாக்கல் செய்யக்கிடையாது. அதனால் தாவா மனுவானது இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4) **<u>7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

4.1. இதில் வியக்கத்தக்கமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் வன்மையாக மறுக்கப்படுகின்றன. மனுதாரர்கள்/வாதிகள் இந்நிர் மனுவை மனுதாரர் தரப்பு விசாரணை முடிந்த பின் பிரதிவாதிகள் பக்கம் சாட்சிகள் விசாரணையின் பொழுது தாக்கல் செய்கிறார் மற்றும் மனுதாரர்களின் மனுவிலுள்ள காரணங்களும் உட்பிரிவு 14/2 தவறானதாகும் என்றும் இந்த 7, 8 பிரதிவாதிகளால் உற்பத்தி செய்யப்பட்டது என்று கூறுவதும் உட்பிரிவு 14/2 ஐ ரத்து செய்ய வேண்டியதாக உள்ளது என்றும் மற்றும் சொத்தின் நடுமையம் சர்வே எண்.14/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ள தவறான உட்பிரிவை நீக்கரவு செய்ய 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு ஒரு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கும்படியும் என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

4.2. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.14 மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் விருதுநகர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் வளாகம் அவர்களுக்கு சர்வே எண் உட்பிரிவு 14/2–யை நீக்கம் செய்ய கோரி கடந்த 25.03.2017ம் தேதிய மனு அளித்துள்ளதை வா.சா.ஆ.14 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆனால் இ.ம.எண்.09/2025 மனுவில் தாவா சொத்துக்கு கொடுத்த புல வரைபடம் நகல், மூலப்பத்திரம், ஆணையர் அறிக்கை மூலம் தான் தெரிய வருகிறது என்று கூறுகின்றதை ஏற்றுக்கொள்ள முடியாது. நீதிமன்ற ஆணையாளர் கடந்த 25.04.2022ம் தேதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக அரசு அலுவலர்களுக்கு மனு செய்து வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு உட்பிரிபு 14/2 ஆகியுள்ளதை ஆவணங்கள் மூலம்

உறுதிபடுத்தி உள்ளனர்.

4.3. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக் கூடியதல்ல. ஏனென்றால் பிரதிவாதி தரப்பு சாட்சிகளுக்காக வழக்கு விசாரணையில் இருக்கும்பொழுது வாதி தரப்பு கூடுதல் சாட்சியங்கள், ஆணையர் அறிக்கை அனைத்தும் 7ம் எதிர்மனுதாரருக்கு சாதகமாக இருப்பதை தெரிந்து கொண்டு 7ம் எதிர்மனுதாரரை வீண் கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், ஷை வழக்கை முடிவுறச் செய்யாமல் காலதாமதம் செய்ய வேண்டுமென்றும், நீதிமன்றத்தின் நேரத்தையும் வீணடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.09/2025 மனுவை 7ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டடப்படுகிறது.

5. **<u>8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் –</u>**

5.1. இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவைகள் மற்றும் கற்பனையானவைகள் ஆகும். மேலும் அவையனைத்தும் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகின்றன. மனுதாரர்/வாதி விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு சர்வே எண் உட்பிரிவு 14/2யை நீக்கம் செய்ய கோரி கடந்த 25.03.2017ம் தேதி மனு அளித்துள்ளதாக கூறி மேற்படி மனுவினை வா.சா.ஆ.14 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேலும் வாதிகள் தரப்பில் சாட்சியாக கடந்த 21.09.2023ம் தேதி விசாரணை செய்யப்பட்ட மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் அவரது குறுக்கு விசாரணையில் வண்டிப்பாதையானது சங்கரபாண்டியபுரம் கண்மாயில் இருந்து ஆரம்பித்து கிழக்கு நோக்கி வந்து சங்கரபாண்டியபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானம் வழியாக செல்கிறது என்றும், கிராம கணக்கு மற்றும் புலப்பட நகலின் படி சர்வே எண்.14/2 ஆனது வண்டிப்பாதை என்றுதான் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.2. ஆனால் இந்நிர் மனுவில் தாவா சொத்தில் சர்வே எண்.14/2 உட்பிரிவு தவறாக உள்ளது என்ற விவரம் தாவா சொத்துக்கு கொடுத்த வரைபட நகல், மூலப்பத்திரம், ஆணையர் அறிக்கை மூலம் தான் தெரிய வருகிறது என்று கூறியுள்ளதன் மூலம் தாவா மனுவானது மனுதாரரால் வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்றும், நீதிமன்றத்தினை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடும் தாக்கல் செய்திருப்பது தெரிய வருகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல. வாதி தரப்பு கூடுதல் சாட்சியங்கள், நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை அனைத்தும் இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு சாதகமாக இருப்பதை அறிந்து இந்நிர் எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும், தாக்கல் செய்துள்ள தாவா மனுவானது 8ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

6. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

7. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப் படவில்லை.

8. <u>தீர்வு</u>

**8.1.** மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கை சீர்திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர்கள் சொத்துக்கு மேற்கிலும், சங்கரபாண்டியபுரம் எல்லைக்கும் கிழக்கிலும் வண்டிப்பாதை இருந்து வருகிறது. மேற்படி வண்டிப்பாதையை மறைத்து மனுதாரர்கள் புஞ்சைக்குள் நடுவில் இருப்பதாக 14/2 என்று தவறாக உட்பிரிவு செய்யப்பட்டு வண்டி பாதையாக காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்தில் சர்வே எண்.14/2 உட்பிரிவு தவறாக உள்ளது என்ற விவரம் மனுதாரருக்கு தாவா சொத்துக்கு கொடுத்த புலப்பட நகல், மூலபத்திரம் மற்றும் நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்த போதுதான் தெரிய

வந்துள்ளது. மனுதாரர்கள் வழக்கறிஞர் தவறாக 14/2 உட்பிரிவு செய்யப்பட்டிருப்பதை அறிய வந்த பின்னர்தான் மேற்படி தவறை திருத்தம் செய்வதற்கு பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியதின் படியும், வழக்கின் தன்மைக்கு ஏற்பவும் வழக்கை சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வழக்கை சீர்திருத்தம் செய்வதினால் வழக்கின் அடிப்படை தன்மையோ அல்லது வழக்குமூலமோ மாறக்கூடியதாக இல்லை. அவ்வாறு பிராதை சீர்திருத்தம் செய்யாதபட்சத்தில் மனுதாரருக்கும் அவரது குடும்பத்திற்கும் மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதால் இம்மனு தாக்கல்.

8.2. எதிர்மனுதாரர்கள் தங்களைுடைய ஆட்சேபணையில் இந்நிர் மனுவில் தாவா சொத்தில் சர்வே எண்.14/2 உட்பிரிவு தவறாக உள்ளது என்ற விவரம் தாவா சொத்துக்கு கொடுத்த வரைபட நகல், மூலப்பத்திரம், ஆணையர் அறிக்கை மூலம் தான் தெரிய வருகிறது என்று கூறியுள்ளதன் மூலம் தாவா மனுவானது மனுதாரரால் வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்றும், நீதிமன்றத்தின் நேரத்தினை வீணடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடும் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

8.3. இரு தரப்பினரின் வாதங்களும், ஆவணங்களும் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

**<u>கட்டளை 6 விதி 17, வாதுரைகளைத் திருத்துதல் –</u>**

17. வழக்குரைகளை திருத்துதல் – நீதிமன்றம் நடவடிக்கைகளின் எந்தக் கட்டத்திலும் நியாயமாக இருக்கலாகும் முறையிலும் நிபந்தனைகளின் பேரிலும் இருதரப்பினரில் எவர் ஒருவரையும் அவருடைய வழக்குரைகளை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு அனுமதிக்கலாம். மேலும் தரப்பினர்களிடையே விவாதத்திலுள்ள உண்மையான பிரச்சனைகளை தீர்மானிக்கும் பொருட்டு எத்தகைய திருத்தங்கள் அவசியமாக இருக்கலாகுமோ அத்தகைய திருத்தங்கள் எல்லாம் செயல்படுதல் வேண்டும்.

வரம்புரையாக மிகவும் கவனமாக இருந்தும், வழக்கு தரப்பினர் அந்த விடயத்தை விசாரணைக்கு முன் எழுப்பமுடியவில்லை என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்தாலன்றி, வழக்குரையில் திருத்தஞ் செய்வதற்கான விண்ணப்பத்தை விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றம்அனுமதிக்கக்கூடாது.

8.4. கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி வழங்கலாம். ஆனால் கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள proviso (நிபந்தனையின்) படி வழக்கின் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், due diligence (மிகவும் கவனமாக இருந்த போதும்) முன்பே அந்த விஷயத்தை முன்வைக்க இயலாத சூழல் இருந்தது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். இவ்வழக்கில் மனுதாரர் வா.சா.ஆ.14 என்ற ஆவணமாக 25.03.2017 அன்று மாவட்ட வருவாய் அலுவலரிடம் சர்வே எண் 14/2 உட்பிரிவை நீக்க கோரி மனு அளித்திருப்பது பதிவாகியுள்ளது இதை இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

8.5. இதன்மூலம் அந்த உட்பிரிவு குறித்த விபரம் மனுதாரர்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலேயே தெரிந்திருந்தது என்பது தெளிவாகிறது. ஆனால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதும், அதன்பின் பல ஆண்டுகள் கடந்தும் மற்றும் பல்வேறு சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் இருந்தபோதிலும் மனுதாரர் இதற்கான திருத்த மனுவை முன்வைக்கவில்லை.

8.6. மேலும் அரசு அலுவலர்கள் கூடுதல் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, கிராம கணக்கு மற்றும் புலப்பட நகலின் படி சர்வே எண் 14/2 வண்டிப்பாதை என பதிவாகியுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளதும் பதிவாகியுள்ளது. இதனை கருத்தில் கொண்டால், மனுதாரர்கள் கூறுவது போல இந்த விபரம் சமீபத்தில் தான் தெரிய வந்தது என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். மேலும் தற்போது கோரப்படும் திருத்தத்தின் மூலம் சர்வே எண் 14/2 உட்பிரிவை நீக்க வேண்டும் என்ற செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. இது வழக்கின்

தன்மையையும், வழக்கு மூலத்தையும் மாற்றக்கூடியதாகும். அதற்கான நீதிமன்ற கட்டணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் பதிவாகியுள்ளது.

8.7. மேற்கண்ட சூழ்நிலைகளில், மனுதாரர்கள் due diligence (மிகவும் கவனமாக இருந்த போதும்) முன்பே இந்த திருத்தத்தை கோர இயலவில்லை என்பதை நிரூபிக்கத் தவறியுள்ளார். மேற்கண்ட காரணத்தினாலும் இவ்வழக்கின் வயதை கருத்தில் கொண்டும், கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்கள் கோரியுள்ள திருத்தத்தை அனுமதிக்க இந்த நீதிமன்றம் முன்வர இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>9. இறுதி முடிவு</u>**

இறுதியாக இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சாத்தூர்.**
**இ.ம.எண்.09/2025**
**இன்**
**அ.வ.எண்.59/2017**
**உத்தரவு**
**நாள் –12.03.2026.**